**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 302/2019

**11.03.2026**

## D.W.1- பாண்டி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தலைமை சர்வேயராக சிவகங்கை மாவட்ட ஆதிதிராவிட நலத்துறையில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மதுரை மாவட்டம், பேரையூர் தாலுக்காவில் வேலை பார்த்தேன். தாவா சொத்து மற்றும் அதனை சார்ந்த மற்ற சொத்துக்கள் விஸ்தீரணம் 23.5 ஏர்ஸ் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் படிவு (எ) மஞ்சுபடிவு, படிவு (எ) கிழவன்படிவு, வீரணன் ஆகிய பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது. மேற்படியார்கள் தலா 19.30 செண்டு வீதம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். நானும், வாதியும் வீரணனின் வாரிசுதாரர் பிரிவில் வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி வீரணனுக்கு நல்லு, அய்யர் என 2 பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி 19.30 செண்டு வீரணன் மகன்கன் நல்லு மற்றும் அய்யருக்கு தலா 9.65 சென்டாக பிரிந்தது என்றால் சரிதான். நல்லுவிற்கு பிரிந்த 9.65 செண்டு தான் தாவா சொத்து என்றால் சரிதான். நல்லுவின் பிள்ளைகள் எனது அப்பாவும், வாதி என்றால் சரிதான். 27.03.1975ம் தேதியில் தாவா சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டதாக ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டதாக எனது எதிர்வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு பத்திரம் எழுதவில்லை, ஆகையால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.15-9 என்ற வீட்டடி மனை வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அது அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. சர்வே எண்.15-9 என்ற வீட்டடி மனை வாதிக்கு பாகமாக ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.15-9ல் எனது அப்பாவுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட பாகத்தை பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்

என்றால் சரிதான். சர்வே எண்.15-9ல் கிரையமாக கொடுத்துள்ள சொத்து வேறு இடத்திலும், அவருக்கு பாகமாக கிடைத்த சொத்துக்கள் மேற்படி சர்வே எண்ணிலேயே வேறு இடத்தில் உள்ளது. மேற்படி சங்கதியை எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பதிலாக வாதிக்கு சர்வே எண்.15-9ல் உள்ள வீட்டடி மனையை ஒதுக்கியதாக எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்றாலும், அதற்காக தான் பி.வா.சா.ஆ,10 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக அந்த சொத்து வேறு, வீட்டடி மனை வேறு என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் எனது தந்தைக்கு கிடைத்த பாகத்தை படிவுக்கு கிரையம் கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர எனது அப்பாவுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வேறு சொத்துக்கள் பாகமாகிவிட்டது என்றால் சரியல்ல, தாவா சொத்தும் பாகமாகிவிட்டது. தாவா சொத்தை நானும், 3வது பிரதிவாதியான எனது அக்காவும் எனது மனைவிக்கு தானமாக எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3 தானப்பத்திரத்தில் எனது தந்தையுடன் பிறந்ததாக சொல்லப்படும் சீனியம்மாள் மற்றும் முத்துப்பெருமாயி ஆகியோர்களின் வாரிசுகளை சேர்த்து எழுதிக்கொடுத்தாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு பாகமாக கிடைத்ததால் அவர்களை கட்டுப்படுத்தவில்லை. தாவா சொத்தை பொறுத்து எங்களுக்கு பாகம் ஒதுக்கியதாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சீனியம்மாள், முத்துப்பெருமாயிக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகமாக கிடைத்தது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.3ல் எனது தகப்பனார் வழி மூலம் பூர்வீக பாத்தியப்பட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுக்கு பாகமானதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் பிறப்பதற்கு முன்பிருந்தே வீடு உள்ளது. பி.வா.சா.ஆ.3ல் காலியிடமாக காண்பித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 மேற்படி சொத்தை எனது மனைவி எனக்கு வழக்கு நிலுவையில் இருக்கும்போது தானம் கொடுத்த பத்திரம் என்றால் சரிதான்.

மேற்படி பத்திரத்திலும் காலிமனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 110 சதுர அடிக்கு வீடு காண்பிக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் விஸ்தீரணமாக 3675 சதுர அடி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் எனது மனைவி, எனக்கு எழுதிக்கொடுத்த சீர்திருத்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி சீர்திருத்தப்பத்திரத்தில் சொத்தின் விஸ்தீரணம் 2381.25 சதுர அடி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான ஆவணங்கள் சொத்தில் வில்லங்கத்தை ஏற்படுத்த எங்களுக்குள்ளே ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் சர்வேயர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி சொத்தின் வருவாய் ஆவணங்களை எனது பெயரிலும், எனது சகோதரி பெயரிலும் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பட்டா மாற்றம் செய்யும்போது வாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் உள்ள வீடு யாருடைய அனுபவத்திலும் இல்லாமல் காலியாக உள்ளது என்றால் எனது தாயார் உயிருடன் இருக்கும்வரையில் அவர் இருந்தார். அவர் காலத்திற்கு பிறகு நான் அவ்வப்போது வந்து செல்கிறேன். தாவா சொத்து எனது அனுபவத்திலும், வாதியின் அனுபவத்திலும் கூட்டாக உள்ளது என்றால் சரியல்ல. எனது தனித்த அனுபவத்தில் இருப்பதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் வீடு கட்ட அனுமதி கோரிய விண்ணப்பம் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். மேற்படி தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை எனது நிரூபண வாக்கமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சினையில் என் மீது விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், மேற்படி வழக்க உண்மைக்கு புறம்பானது என குறைவு செய்துவிட்டார்கள். அதற்கு எதிராக வாதி தனிநபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை, கூட்டு அனுபவத்தில் உள்ளது, வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள ஆவணங்களை தாவா சொத்து பாகம் பிரிக்கப்பட்டதை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.11 14:54:29 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.